# திருமூலரும் தாந்திரீக மெய்யியலும்

எஸ். முகுந்தன்

**ஆய்வுச் சுருக்கம்**

*இந்தியச் சமய மெய்யியற் புலத்தில் தாந்திரீக நெறிக்குத் தனித்துவமான முக்கியத்துவம் உண்டு. இது புராதன தாய்வழிச் சமூகத்தில் பயில் நிலையிலிருந்த சடங்கியலின் தொன்மமாக இன்று அடையாளப்படுத்தப்படுகிறது. பெண்மையின் ஆற்றல், பிரபஞ்ச இயற்கை, மனித இன விருத்தி, உலகியல் வாழ்வு, ஆன்ம ஈடேற்றம் ஆகிய விடயங்களில் தாந்திரீக நெறி அதிக கரிசனை செலுத்தி வந்துள்ளது. பெருஞ் சமயநெறிகள் வளர்ச்சியுற்றபோது அவை தத்தமது சமயமெய்யியல் நெறிமுறைகளுக்குள் தாந்திரீகத்தின் பரிமாணங்களை உள்வாங்கிக்கொண்டன.*

*திருமூலர் கி.பி. 5 ஆம் 6ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் வாழ்ந்தவராகக் கருதப்படும் சித்தராவார். இவர் தனது யோக வாழ்வியல் அனுபவத்தின் மூலம் தாந்திரீகத்தின் யதார்த்தத்தினை நன்கு உணர்ந்துகொண்டு அதனைத் தனது பனுவலான திருமந்திரத்தில் பல சந்தர்ப்பங்களில் பதிவு செய்துள்ளார்.*

*குண்டலினி ஆற்றல், அண்டபிண்ட இணைவு நிலை, யந்திரங்கள், தாந்திரீக அட்சரங்கள், ஆண்பெண் உறவு நிலை முதலிய பல கருத்தியல்கள் இவ்வகையில்குறிப்பிடத்தக்கவையாகும்.*

**திறவுச்சொற்கள் :** தந்திரம், குண்டலினி, யந்திர உபாசனை

**அறிமுகம்**

இந்தியச் சமயமெய்யியல் மரபுகளில் தாந்திரீகத்திற்குத் தனித்துவமான பரிமாணங்கள் உண்டு. இது ஆதிப்பழங்குடிகள் இயற்கையுடன் கொண்டிருந்த உறவின் வெளிப்பாடாகவும் தாய்வழிச்சமூகத்தின் கூட்டு நனவிலியின் பிரதிபலிப்பாகவும் விளங்குகிறது.

பொதுவாகத் தந்திரம் என்ற சொல்லே தாந்திரீகம் என நீட்சியடைந்தது.

"தந்திர" என்ற சமஸ்கிருதச் சொல்லடியாக இதற்குக் கோட்பாடு, நெசவு செய்தல் என்றும் பொருளுண்டு. மேலும்

தனோதி - நீட்சி/விரிவு

த்ரயதி - விடுதலை

என்ற வினையடிகளின் அடிப்படையில் ஆன்ம விடுதலையின் பொருட்டு நிகழ்த்தப்படுகின்ற விரிவான சடங்குகளின் தொகுதி என்று இதற்குப் பொருள் உரைப்பர்.

மேலும் மானிடவியல் நோக்கில் இன விருத்தியுடன் தொடர்புடைய ஒருவகை வளச் சடங்கே தந்திரம் என்பர்.

தத்துவம், மந்திரம் ஆகிய இரு சொற்களின் கூட்டிணைவாகத் தாந்திரீகம் அமைவதாகக் கருதி மனிதன் தான் ஈடேற்றமடையும் நோக்குடன் அமைத்துக்கொண்ட பிரபஞ்ச இயற்கையுடன் தொடர்புடைய ஒருவகைப் பிரயோக அறிவியலாகவும் இதனைக் கருதுவார் உளர்.

**ஆய்விற்கான நியாயப்பாடு**

(Rational/Justification of this Research topic):

தாந்திரீகம் தொடர்பாகப் பல விமர்னங்களும் எழுந்துள்ளன. சில சைவப்பிரிவினர் இதனை இடதுகை வழக்கம் எனப் புறந்தள்ளியுமுள்ளனர்.

---

சிரேஷ்ட விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.